சுடர் ஒளி
THE SUDAR OLI
සුඩර් ඔළි
06.09.2020 சனிக்கிழமை

## புதினம் தெரியுமோ

நேற்று சிறுப்பிட்டியில அப்புக் காத்துவின்ர விருந்து நடக்கிறதைச் சொல்லியிருந்தனானெல்லோ. ஆயிரம் பேர் வருவினமெண்டு , அவைக்கு அறிவிச்சு, ஆக்களை ஏத்தி வாறதுக்கு பஸ்ஸுகளும் ஒழுங்கு பண்ணியிருந்தவராம் அப்புக்காத்து. சாப்பாடெண்டால் ரோட்டில போற பிச்சைக்காரன் கூட ஓடி வருவான் தானே. அதாலதான் சும்மா வெற்றிவிழா எண்டு வைக்காமல் ஆள் சாப் பாட் டோட சேர்த்து வைச்ச தாம் . சரி, இப்பிடி ஆக்களைக் கூட்டி

2



# வீராப்புடைய தலைவர்தான் பிரபாகரன்!!

### எரிக் சொல்ஹெய்ம் பாராட்டு

கொழும்பு, செப். 6

புலிகளின் தலைவரான வேலுப்பிள்ளை பிரபாகரன் சிறந்த தலைவராக, வீராப்பு உள்ள இரா ணுவத் தளபதியாக விளங்கினார். கொடுத்த வாக்கைக் காப்பற்றும் நேர்மை அவரிடம் இருந்தது. எங்கெல்லாம் போர் நிறுத்தம் செய்தாரோ அங்கெல்லாம் அவர் தாக்குதல் நடத்தவில்லை – என்று தெரிவித்தார் நோர்வேயின் சமாதான தூதுவரான எரிக் சொல்ஹெய்ம்.

2

## மீன்பிடிக்கு தடை விதிப்பு

கொழும்பு, செப். 6

படகுகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபடுவோர் நாளை மதியம் 12 மணி வரையில் கடலுக்குச் செல்ல வேண்டாம் என

2

20ஆவது திருத்தத்துக்கு ஆதரவு!

## எதிர்க்கட்சியிலும் சில கறுப்பாடுகள்

கொழும்பு, செப். 6

எதிர்கட்சியைச் சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. இரு பிரிவைச் சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் 20ஆவது திருத்தம் சமர்ப்பிக்கப்ப

2



## மீண்டும் மின்னும் தங்கம்!!

யாழ்ப்பாணம், செப். 6

தங்கத்தின் விலை கடந்த வாரம் குறைவடைந்த நிலையில், தற்போது மீண்டும் விலை உயர்ந்துள்ளது. யாழ்ப்பாணத்தில், நேற்றைய நிலவரப் படி ஒரு பவுண்

2

## விபத்தில் பெண் பலி

யாழ்ப்பாணம், செப். 6

டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் பெண்ணொருவர்

2



## முட்டை விலை 2 ரூபாவால் குறைவு!

கொழும்பு, செப். 6

முட்டையின் விலையை இரண்டு ரூபாவால் குறைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று இலங்கை முட்டை உற்பத்தியாளர் சங்கம் அறிவித்

2

## கட்டைக்காட்டு பகுதியில் கசிப்புத் தளம் முற்றுகை!

கிளிநொச்சி, செப். 6

கிளிநொச்சி - கட்டைக்காடு பகுதியில் பொலிஸாரால் இன்று முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது

2



## மணியின் தலைமையில் இளைஞர்கள் தனி அமைப்பாகச் செயற்பட முடிவா?

2

## சுவர் வீழ்ந்ததில் இளைஞன் சாவு

வவுனியா, செப். 6

சுவர் இடிந்து விழுந்ததில் காயமடைந்து சிகிச்சைபெற்று வந்த இளைஞர் ஒருவர் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்தார். குறித்த இளைஞன் மேசன் தொழில் புரிந்து

2



## எரிவடைந்துள்ள கப்பலை ஆராய்வதற்கு நிபுணர்கள் வெளிநாட்டில் இருந்து வருகை

கொழும்பு, செப். 6

இலங்கையின் கடற்கரையில் இருந்து 40 கடல்மைல்களுக்கு அப்பால் தரிக்கப்பட்டிருக்கும் தீப்பற்றிய கப்பல் தொடர்பாக ஆராய்வதற்கும், விசாரணை செய்வதற்கும், மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் வெளிநாட்டு நிபுணர்கள் சிலர் இன்று இலங்கை வரவுள்ளனர்.

கப்பல் உரிமையாளரின் ஏற்பாட்டில் மீட்பு நடவடிக்கை நிபுணர்கள்,

2

## மீன்பிடிக்கு...

வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. வானிலையில் ஏற்பட்டுள்ள தளம்பல் காரணமாகவே இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தெரியவருகின்றது. (ம-இ)

## முட்டை...

துள்ளது. முட்டை உற்பத்தி சங்கத்தினருக்கும் பிரதமர் மஹிந்தவுக்கும் இடையில் அலரி மாளிகையில் நேற்று இடம்பெற்ற உரையாடலை அடுத்தே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

புதிய தீர்மானத்தின் படி வெள்ளை முட்டையின் மொத்த விலை 19.50 ரூபாவாகவும், சிவப்பு முட்டையின் விலை 20 ரூபாவாகவும் குறைக்கப்படும் என்று சங்கத்தின் தலைவர் ஆர்.எம்.சரத் தெரிவித்தார். மேலும், ஒரு வெள்ளை முட்டையின் சில்லறை விலை 21 ரூபாவாகவும், சிவப்பு முட்டையின் விலை 22 ரூபாவாகவும் குறைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-இ)

# வீராப்புடைய...

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: உண்மையிலேயே பிரபாகரனை அடிக்கடி சந்தித்த தமிழரல்லாத ஒருவர் நானாகத்தான் இருக்க வேண்டும். சில வெளிநாட்டவர்கள் பிரபாகரனைச் சந்தித்தார்கள். அந்தச் சந்திப்புகள் உலகைப் பற்றிய ஒரு தவறான நோக்கை பிரபாகரனுக்குக் கொடுத்திருக்க வேண்டும். வெளியுலகை அவர் விளங்கிக்கொள்ளவில்லை. மேலும், பல வெளிநாட்டவர்கள் பிரபாகரனை சந்திக்க அனுமதிக்கப்பட்டிருந்தால் அவரும் விட்டுக்கொடுப்பை செய்ய வேண்டிய தேவை இருக்கிறது என்பதை அவர் உணர்ந்திருக்கக் கூடும். சமாதான இணக்கத் தீர்வு ஒன்று தேவையானால் இரு தரப்பும் விட்டுக்கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது.

பிரபாகரன் போரின் இறுதிக்கட்டம் வரை நீண்டகாலம் ஒரு சிறந்த வீராப்புடைய இராணுவத் தலைவராக இருந்தார். உலகில் சொந்த விமானப்படையையும் கடற்படையையும் நிறுவிய அரசு அல்லாத தரப்பாக புலிகள் மாத்திரமே இருந்தனர். ஆனால், அவரின் அரசியல் விளக்கப்பாடு துரதிர்ஷ்டவசமாக இதைவிட பெருமளவு குறைவானதாகவே இருந்தது. இவருக்கு தென்னிலங்கை, இந்தியா மற்றும் வெளியுலகம் குறித்த இணக்கப்பாடு பெரிதாக இல்லை.

புலம்பெயர்ந்த தமிழர் சமூகத்தில் இருந்த பலர் அவருக்குத் தவறான ஆலோசனைகளை வழங்கினார்கள். நெருக்கடிக்கு தீர்வொன்றை காண்பதைக் காட்டிலும் விட்டுக்கொடாத ஒரு தலைவராக இருக்குமாறு அவருக்கு கூறினார்கள். சகல வாக்குறுதிகளையும் அவர் காப்பாற்றினார் என்பதை நாம் கூறத்தான் வேண்டும். எங்கெல்லாம் வாக்குறுதி அளித்தாரோ அங்கெல்லாம் இராணுவ நடவடிக்கையை நிறுத்தினார்.

அவரது படைகள் மீது அவருக்கு முழுமையான கட்டுப்பாடு இருந்தது. பாலசிங்கம்தான் அவரது பிரதான ஆலோசகரும் நம்பிக்கைக்குரியவராகவும் விளங்கினார். பாலசிங்கத்தின் அறிவுரைகளை பிரபாகரன் கேட்டு நடக்கும் வரை அநேகமாக சகல விடயங்களுமே சரியான திசையில் சென்றன. ஆனால், பாலசிங்கத்தின் அறிவுரைகளை கேட்காத சந்தர்ப்பங்களில், எல்லாமே பிழையாகிப்போனது.

அவரது தனிப்பட்ட ஆளுமை என்று வரும் போது நல்ல சுவையான சமையல்காரர். நாம் இருவரும் சேர்ந்து நல்ல உணவுகளை சாப்பிட்டிருக்கின்றோம். ஆனால், அவர் மிகவும் ஜாக்கிரதையான பேர்வழி. அவருக்கு நெருக்கமாக போவதென்பது சுலபமானதல்ல. பாலசிங்கத்தின் அறிவுரைகளை பிரபாகரன் முழுமையாக கேட்டிருந்தால் பல்வேறு விடயங்கள் வித்தியாசமானவையாக இருந்திருக்கும்.

நாம் முன்வைத்த யோசனையினால் அந்த நேரத்தில் பிரச்சினையைத் தீர்த்திருக்க முடியும் என்று நம்பினேன். எமது யோசனையை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா ஆகியன ஆதரித்தன. அது ஒரு வலிமையான யோசனை. நீங்கள் போரில் தோற்றுக்கொண்டு போகிறீர்கள் வெற்றிபெறுவதற்கு எந்த வழியும் இல்லை என்று பிரபாகரனிடம் கூறினோம். ஒவ்வொரு போராளியும் பதிவு செய்யப்பட்டு கப்பல் மூலம் தெற்கிற்கு அல்லது வெளிநாட்டுக்கு கொண்டு செல்லப்படுவதே எமது யோசனையாகும்.

சரணடைந்த பிறகு எவருமே கொடுமைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள் என்பதற்கு அமெரிக்காவினதும் இந்தியாவினதும் ஆதரவு கிடைத்தது. அந்த யோசனை பயனளிக்கும் என்று நாம் நம்பிக்கையுடன் இருந்தோம். ஆனால், அதை 2009 ஏப்ரலில் பிரபாகரன் நிராகரித்து விட்டார் - என்றார். (ம-இ)

## புதினம் தெரியுமோ

என்ன பிரியோசனம்? அங்கதான் நிக்குது அப்புக்காத்துவின்ர சாணக்கியம். ஆயிரம் பேரை வரவழைச்சு, இத்தனைபேரும் எனக்காக வேலை செய்த ஆக்கள் எண்டு கட்சியை மிரளவைக்கிறதுதான் திட்டம்.

பழம் நழுவிப் பாலில விழுந்தமாதிரி, மாவையரும் சாப்பாடெண்டவுடன் அங்க வந்திட்டார். உடனேயே இது தான் சந்தர்ப்பம் எண்டு பெரிய மாலை ஒண்டை எடுத்து மாவைக்கு போட்டினம். அவ்வளவுதான். மாலைக்கு மயங்கினார் மாவை. அவ்வளவு நாளும் அப்புக்காத்துவை ஒரு பிடிபிடிச்ச மாவை, எல்லாத்தையும் கஜினி சூர்யா மாதிரி மறந்திட்டு, ஒற்றுமை, ஐக்கியம் எண்டு வேற பக்கத்தால கதைக்கத் தொடங்கிட்டார். அதைவிட ஆயிரம் பேருக்குத் தான் சாப்பாடு ஓடர் குடுத்ததால, மாவையர் மாதிரி சொல்லாமல் கொள்ளாமல் சாப்பிட வந்தவையின்ர தொகையும் கனக்கவாம். அதால ஒரு கட்டத்தில இறைச்சிச் சாப்பாடு இல்லாமல் போக, மிச்ச ஆக்களுக்கு றோஸ் பாணும் பருப்பும் குடுத்துச் சமாளிச்சினமாம். அதெல்லாம் சரி, நல்லூர், நயினாதீவு எண்டு சனம் கோயில், குளத்துக்கு போறதுக்கு ஆயிரத்தெட்டு கட்டுப்பாடு போட்டு, அன்னதானத்தை நிப்பாட்டின சுகாதாரத் துறை, இப்படி ஆயிரக்கணக்கில ஆக்களைக் கூப்பிட்டு, அதுவும் சமூக இடைவெளி, முகக்கவசம் இல்லாமல் போய், சாப்பாடு போடுறதை மட்டும் பிடிக்காமல் தாங்களும் போய் சாப்பிட்டவையாம். ஆருக்குச் சொல்லியழ இதுகளை?

பட்சி

## எரிவடைந்துள்ள...



அனர்த்த மதிப்பீட்டாளர்கள் மற்றும் சட்ட ஆலோசகர்கள் உட்பட 10 பிரிட்டிஷ் நிபுணர்கள் இன்று மத்தளை வானூர்தி நிலையத்துக்கு வருகின்றனர். பின்னர் அவர்கள் கல்முனையில் இருந்து அனர்த்தத்துக்கு உள்ளாகியுள்ள கப்பல் இருக்கும் இடத்துக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அத்துடன் அவசர நிலைமைகளை கண்காணிப்பதற்காக இந்தியாவின் இரண்டு வானூர்திகள் தொடர்ந்தும் மத்தள வானூர்தித் தளத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. (ம-இ)

## எதிர்க்கட்சியிலும்...

டும்போது, அதற்கு ஆதரவளிக்க உள்ளோம் என உறுதியளித்துள்ளனர் என்று கூறப்படுகின்றது. அரசின் முக்கிய பிரமுகரிடம் அவர்கள் இந்த வாக்குறுதியை வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அரசமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பாக ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி உள்ளிட்ட சிறுபான்மை கட்சிகள் அதற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றன. அதாவது, தனிநபருக்கு நிறைவேற்று அதிகாரம் தடையின்றி முழுமையாகக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காக மாத்திரமே குறித்த 20ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது என இந்தக் கட்சிகள் தொடர்ந்து கூறிவருகின்றன. இந்த நிலையில் எதிர்க்கட்சியை சேர்ந்த ஒன்பது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவளிக்க உள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-இ)

## கட்டைக்காட்டு பகுதியில்....

கசிப்புத் தளமொன்று முற்றுகையிடப்பட்டது. 176 லீற்றர் கசிப்பு இதன்போது மீட்கப்பட்டது. தருமபுர பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கேரத் தலைமையில் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. கசிப்பைக் காச்சினர் என்ற சந்தேகத்தில் இருவர் கைதுசெய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து 176 லீற்றர் கசிப்பைத் தவிர்த்து ஆயிரத்து 190 லீற்றர் கோடாவும் மீட்கப்பட்டது. சந்தேக நபர்கள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (ம-113)

## மணியின் தலைமையில் இளைஞர்கள்...

யாழ்ப்பாணம், செப். 6

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளராக இருந்த சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் அமைப்பொன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்புரிமையில் இருந்து சட்டத்தரணி வி.மணிவண்ணன் நீக்கப்பட்டுள்ளனர் என கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று அறிவித்திருந்தார். இந்த நிலையிலேயே மணிவண்ணனைத் தலைமை ஒருங்கிணைப்பாளராகக் கொண்டு தமிழ்த் தேசிய இளைஞர் பேரவை என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது என் தெரியவருகின்றது. (ம-இ)

## மீண்டும்..

தூய தங்கத்தின் விலை ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரித்துள்ளது என வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன. இதேபோன்று, ஆபரணத் தங்கத்தின் விலை 910 ரூபாவால் அதிகரித்து 91 ஆயிரத்து 660 ரூபாவாக விற்பனையாகிறது. கொரோனா வைரஸ் தாக்கம் காரணமாக தொழில் துறை தேக்கமடைந்து அதிகளவானோர் தங்கத்தில் முதலீடு செய்தனர். இதனால் தங்கத்திற்கு அதிக கேள்வி எழுந்தமையால் விலை அதிகரித்தது. (ம-இ)

## விபத்தில்...

சம்பவ இடத்தில் உயிரிழந்தார். தனங்களப்புச் சந்திப் பகுதியில் சங்குப்பிட்டி வீதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. முற்பகல் 11.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது. உயிரிழந்த பெண் யார் என்று அடையாளம் காணப்படவில்லை. அவர் ஒரு காலை இழந்த நிலையில் அவருக்குச் செயற்கைக்கால் பொருத்தப்பட்டுள்ளது. (ம-இ)

## சுவர் வீழ்ந்ததில்...

வருவதுடன் வவுனியா நகரப்பகுதியில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கட்டுமான பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்த நிலையில் பணியில் ஈடுபட்டிருந்த அவர் மீது கடந்த 30ஆம் திகதி சுவர் ஒன்று இடிந்து வீழ்ந்துள்ளது.

இதனால் படுகாயமடைந்த இளைஞன் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். எனினும் சிகிச்சை பலனின்றி இன்றையதினம் அவர் உயிரிழந்தார். சம்பவத்தில் மட்டக்களப்பைச் சேர்ந்த காந்தி என்ற 24 வயதுடைய இளைஞனே உயிரிழந்தார். (ம-110)

# மருத்துவமனையில் எரியூட்டப்படும் கழிவுகள்: பல்கலைக்கழக மருத்துவமனைக்கு எச்சரிக்கை

கொழும்பு, செப்.6

கொழும்பு புறநகர் பொரலஸ் கமுவவில் அமைந்துள்ள சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனைக்கு இறுதி எச்சரிக்கையை விடுக்க மத்திய சுற்றாடல் ஆணையகம் தயாராவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருத்துவமனையில் எரியூட்டப்படும் கழிவுகள் காரணமாக அருகில் உள்ள குடியிருப்பாளர்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாகக் கூறியே இந்த எச்சரிக்கை விடுக்கப்படவுள்ளது.

எரியூட்டப்படும் கழிவுகளில் இருந்து வெளிவரும் புகை காரணமாக தமது சுற்றுச்சூழல் மாசடைகின்றது எனவும், இதனால் தமக்கு சுவாசப்பிரச்சினை ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் குடியிருப்பாளர்கள் முறையிட்டுள்ளனர்.

ஏற்கனவே இது தொடர்பில் அறிவுறுத்துவதற்காக மத்திய சுற்றாடல் ஆணையக அதிகாரிகள் மருத்துவமனைக்குச் சென்று உரிய வழிகாட்டல்களை வழங்கியபோதும் மருத்துவமனை தொடர்ந்தும் தமது நடவடிக்கைகளை நிறுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந் நிலையில் பிரச்சனைக்குத் தீர்வு இல்லையெனில் நீதிமன்றத்தின் உதவியை நாடவுள்ளோம் என மத்திய சுற்றாடல் ஆணையகம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (ந-இ)

# பொலிஸ் நிலைய தீப்பரவல் கட்டுக்குள்

கொழும்பு, செப்.6

மிரிஹான பொலிஸ் நிலையத்தில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டுள்ளது. இந்தத் தீ விபத்து பொலிஸாரால், கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

மின் கட்டமைப்பில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே இந்தத் தீ விபத்து ஏற்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

தீப்பரவல் ஏற்பட்டதையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார், நீர், மணல் என்பவற்றைக் கொண்டுதீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். கொழும்பு கோட்டை மாநகர சபைத் தீயணைப்பு பிரிவினர் சம்பவ இடத்துக்குச் செல்வதற்கு முன்பாகவே தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக தெரியவருகின்றது. பொலிஸ் நிலையத்துக்கான மின்விநியோகம் தற்போது தடைப்பட்டுள்ளது டன், அதனை மீள் திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ந-இ)

# சீரற்ற வானிலை: 14 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை

கொழும்பு, செப்.6

சீரற்ற வானிலை தொடர்பில் 14 மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 70-80 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (ந-இ)



# நாட்டில் கொரோனா ஆபத்து நீங்கவில்லை

கொழும்பு, செப்.6

நாட்டில் சமூகத்திற்குள் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படவில்லை என்றாலும் கொரோனா ஆபத்து நீங்கவில்லை என வைத்திய ஆராய்ச்சி ஸ்தாபனம் எச்சரித்துள்ளது. இதனால் உரிய முறையில் சுகாதார ஆலோசனைகளைப் பின்பற்றுமாறு ஸ்தாபனத்தின் விசேட வைத்தியர் ஜூட் ஜயமஹ தெரிவித்துள்ளார்.

மேலும், சமூகத்திற்குள் பரவலாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பி.சி..ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ந-இ)




கொழும்பு, செப்.6

நாட்டில் அடையாளம் காணப்பட்ட மொத்த கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை 3,121 ஆக உயர்வடைந்துள்ளது.

இந்தியாவிலிருந்து வருகை தந்த மூவர், பஹ்ரைன் மற்றும் கட்டார் ஆகிய நாடுகளிலிருந்து வருகை தந்த தலா ஒருவர், தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்த கந்தகாடு புனர்வாழ்வு மற்றும் சிகிச்சை நிலையத்தில் ஒருவர் உட்பட ஆறு பேர் நேற்றைய தினம் புதிய கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி குணமடைந்த 11 பேர் வைத்தியசாலைகளிலிருந்து வெளியேற்றப்பட்டு உள்ளனர். இதன்மூலம் குணமடைந்தவர்களின் தொகை 2918 ஆக உயர்வடைந்தது. அத்துடன் 12 வெளிநாட்டினர் உட்பட மொத்தமாக 191 கொரோனாத் தொற்றாளர்கள் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 79 பேர் கொரோனாத் தொற்று சந்தேகத்தின் பேரில் தொடர்ந்தும் வைத்தியக் கண்காணிப்பில் உள்ளனர். இதுவரை 12 பேர் உயிரிழந்துள்ளனர். (ந-இ)



கிளிநொச்சி தருமபுரம் மத்திய கல்லூரியில் நேற்று சனிக்கிழமை இந்து பௌத்த கலாசார பேரவையின் செயலாளரும் வட மாகாணத்துக்கான ஜனாதிபதியின் ஆலோசகருமான எம.சி.எஸ் இராமச்சந்திரனால் இலவச சிங்கள மற்றும் ஆங்கில பாட கற்கைநெறிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. (ந-113)

# தமிழ் மாணவி ஒருவர் ஒக்ஸ்பேர்ட்க்கு தெரிவு

கொழும்பு, செப்.6

இலண்டனில் கல்வி கற்று வரும் தமிழ் மாணவி சுவிகா குமாரவேலு உயர்தரப் பரீட்சையில், மருத்துவத்துறையில் 4 பாடங்களிலும் மிகத் திறமையான சித்திகளைப் பெற்று ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

இந்தப் பரீட்சை முடிவுகளை தான் எதிர்பார்க்கவில்லை என்று அவர் மகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார். சுவிகாவின் தாயாரும் தனது மகள் பரீட்சையில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றுள்ளமை மகிழ்ச்சியளிப்பதாகக் கூறியுள்ளார். அவர் பிரெஞ்ச் கதைப்பதிலும் மிகவும் திறமையானவர் எனத் தெரியவருகிறது.

அவர் படித்த பாடசாலைக்கு ஒருமுறை பிரித்தானிய மகாராணி சென்றபோது ராணியை பிரெஞ்ச் மொழியில் வரவேற்பதற்காக சுவிகா தெரிவுசெய்யப்படிருந்தார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது.

சாதாரண குடும்பத்தில் பிறந்திருந்தாலும் படிப்பிற்கென அதிக செலவின்றி சாதாரண பாடசாலைக் கல்வியையே தொடர்ந்த சுவிகாவை தாய், தந்தையர் மிகவும் ஊக்குவித்துள்ளனர். இந்த நிலையிலேயே சுவிகா மருத்துவத்துறையில் மிகத் திறமையான மதிப்பெண்களைப் பெற்று ஒக்ஸ்பேர்ட் பல்கலைக்கழகத்துக்கு செல்லவுள்ளார். (ற-இ)

# திடீர் பரிசோதனையில் கரைச்சி பிரதேச சந்தைகள்

கிளிநொச்சி. செப். 6

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இயங்கும் சந்தைகள், வீதியோரங்களில் இயங்கும் மரக்கறி மற்றும் கடலுணவுகள் விற்பனை பிரிவுகள் நேற்று சனிக்கிழமை திடீர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பணியக மேற்பார்வை பொது சுகாதாரப் பரிசோதகர், பொது சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் கரைச்சி பிரதேச சபை செயலாளர் மற்றும் பிரதேச அலுவலர்கள் இணைந்து திடீர் பரிசோதனைகளை நடாத்தினர். பரிசோதனையின் போது பழுதடைந்த மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவுகள் பறிமுதல் செய்யப்பட்டு வியாபாரிகளின் சம்மதத்துடன் அழிக்கப்பட்டன.

பழுதடைந்த மரக்கறி வகைகள் மற்றும் கடலுணவுகள் விற்பனை செய்தவர்கள் சுகாதார பகுதியினரால் எச்சரிக்கை செய்யப்பட்டு இதனுடன் இனிவரும் காலங்களில் பழுதடைந்த பொருள்கள் விற்பனை செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தியுள்ளனர். (ந-9)



## நன்னீர் மீன்வளத்தை மேம்படுத்தல் வியாபாரத் திட்டமிடல் நிகழ்வு

முல்லைத்தீவு, செப்.6

உலக உணவுத்திட்ட செயற்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்திட்டங்களில் ஒன்றான கிராம மட்ட நீர்நிலைகளில் நன்னீர் மீன்வளத்தை மேம்படுத்தல் திட்டத்தின் அமுலாக்கத்திற்குத் தேவையான "வியாபாரத் திட்டமிடல் நிகழ்வு" பயிற்சியாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை துணுக்காய் பிரதேச செயலகத்தில் கடந்த 4ம் மற்றும் 5ம் திகதிகளில் நடைபெற்றது.

இப் பயிற்சிநெறியானது தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் விரிவாக்கல் பகுதி பணிப்பாளர் திருமதி .புஸ்பலதா தலைமையில் நடைபெற்றது.

மேற்படி பயிற்சிநெறியில் பிரதேச செயலாளர், தென்னியன்குளம் கிராமிய நன்னீர் மீன்பிடி சங்க உறுப்பினர்கள், குறிப்பிட்ட திட்ட அமுலாக்கத்திற்காக தெரிவுசெய்யப்பட்ட கிராமங்களின் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். (ந-222)





கொடிகாமம் வடக்கு கேசரப்பிட்டி பெரிய தம்பிரான் பிள்ளையார் உடனுறை காளியம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவ தேர்த் திருவிழா நேற்று சனிக்கிழமை ஆலய பிரதம குரு சிவசிறீ நீலகண்டக் குருக்கள் தலைமையில் இடம் பெற்றது. (ந-159)

## நடைபாதையில் வாகனங்கள் தரிப்பு; விரைவில் கடுமையான சட்டம் அமுல்

கொழும்பு, செப்.6

நடை பாதையில் வாகனங்களை நிறுத்துவது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் கடுமையான சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. பொலிஸ் போக்குவரத்து தலைமையகத்துக்குப் பொறுப்பான இயக்குநர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இந்திக்க ஹப்புகொட இதனைத் தெரிவித்துள்ளார்.

மேலும், கிரேன்கள் அல்லது சில பொருள்களைப் பயன்படுத்தி நடைபாதையில் நிறுத்தப்பட்டுள்ள வாகனங்களை அகற்ற நேரிடும். அதற்காக செலவாகும் பணத்தை உரிமையாளர்கள் செலுத்த நேரிடும். அத்துடன் வாகனங்களுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அதனையும் உரிமையாளர்கள் ஏற்க நேரிடும் என பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ந-இ)





## கட்டுப்பாட்டை இழந்த நோயாளர் காவு வண்டி

யாழ்ப்பாணம், செப்.6

கட்டுப்பாட்டை இழந்த நோயாளர் காவு வண்டி, இமையாணன் புறாப்பொறுக்கி பகுதியில் நேற்றுக் காலை விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் வாகனத்தின் முன்பகுதி பெரும் சேதத்துக்குள்ளாகிய நிலையில், சாரதிக்கும் அதில் பயணித்த உதவியாளருக்கும் காயம் எதுவும் ஏற்படவில்லை.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த நோயாளர் காவு வண்டி புறாப்பொறுக்கிப் பகுதியில் கட்டுப்பாட்டை இழந்து 25 ஆவது மைல்கல்லை உடைத்துக் கொண்டு அருகிலிருந்த பலசரக்குக் கடைக்குள் நுழைந்தது. இதனால் கடையின் முன்பகுதி சேதமடைந்தது. இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை நெல்லியடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-108)



## 'வருமுன் காப்போம்' விழிப்புணர்வு நடைபவனி

தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையில் உலகவங்கியின் அனுசரணையுடன் இடம்பெறும் *Primary Care System Strengthening Project (PSSP)* திட்டத்தின் ஒரு அங்கமாக உடற்பயிற்சியினை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்தும் நோக்குடன் இடம்பெறும் "வருமுன் காப்போம்" நடைபவனி இன்று காலை 6.30 மணியளவில் ஆரம்பமானது.

இந் நடைபவனி தம்பலகாமம் பிரதேச செயலக வளாகத்தில் இருந்து தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலை வரை நடைபெற்றது. உடற்பயிற்சியின் ஆரம்ப கட்ட நடைபவனியை பிரதேச செயலக வளாகத்தில் வைத்து விளையாட்டு அலுவலர் ஹாரிஸ் ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து உடற் பயிற்சியும் நடைபெற்று நடைபவனி ஆரம்பமானது.

தம்பலகாமம் பிரதேச வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி டாக்டர் ஜீவராஜ் தலைமையில் இடம் பெற்ற குறித்த நடைபவனியில் தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெயகௌரி ஸ்ரீபதி, வைத்தியசாலை வைத்தியர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள்,பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், புதிய பட்டதாரி பயிலுநர்கள்,தம்பலகாமம் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்கள்,தம்பலகாமம் பொலிஸ் நிலைய பொலிஸார்கள் என பலர் கலந்து கொண்டார்கள். (ந)

## இறைச்சிக்கு கடத்திய 11 மாடுகள் மீட்பு

வவுனியா, செப்.6

வவுனியா நெடுங்கேணியிலிருந்து மதவாச்சி நோக்கி இறைச்சிக்காக கடத்திச்செல்லப்பட்ட 11 மாடுகளை இன்று அதிகாலை மடுக்கந்த பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த மாடுகள் நெடுங்கேணியிலிருந்து மாமடுப்பகுதியூடாக அனுமதிப்பத்திரம் இன்றி மதவாச்சி நோக்கி கொண்டு செல்லவிருந்த நிலையில், மடுகந்தைப்பகுதியில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவற்றை மீட்டுள்ளனர்.

மாடுகளை கடத்திச் செல்லப் பயன்படுத்தப் பட்ட கப் ரக வாகனத்தையும், இரண்டு நபர்களையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்கள் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (ற-110)



# இறக்குமதி செய்யப்படும் மருந்துகள் விரைவில் இலங்கையில் உற்பத்தி

கொழும்பு, செப்.6

இறக்குமதி செய்யப்படும் சில மருந்துகள் அடுத்த 18 மாதங்களில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் ஊடாக, ஔடத உற்பத்திகள் வழங்கல்கள் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமனவின் மேற்பார்வையில் உற்பத்தி செய்யப்படும் என அமைச்சின் செய்தி தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார் என்று கொழும்பு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.



மேலும், மருந்துகளைத் தயாரிக்க ஆரம்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. புற்றுநோய் மருந்துகளைத் தயாரிக்க மற்றொரு தொழிற்சாலை அமைக்க கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. தொற்றா நோய்கள் அல்லாத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு நோயாளி மருந்துகளை வாங்க சுமார் 150,000 ரூபா செலவிட வேண்டும், சில சமயங்களில் புற்றுநோய் நோயாளி ஒருவருக்கு மருந்துகளுக்கு ஒரு மில்லியன் ரூபா தேவைப்படுகிறது.

இந்நிலையில், மொத்த மருந்துகளின் தேவையில் 15 சதவீதம் மட்டுமே அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன என அவர் தெரிவித்துள்ளார். (ந-இ)

## அவசர விபத்து சிகிச்சை பிரிவு திறந்து வைப்பு

தம்புள்ள, செப்.6

தம்புள்ள ஆதார வைத்தியசாலையின் அவசர விபத்து சிகிச்சை பிரிவு அமைச்சர் ஜனக்க பண்டார தென்னகோன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. 100 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த அவசர சிகிச்சை பிரிவின் மூலம் ஊவா, வடமத்திய , மற்றும் வடமேல் மாகாணங்களைச் சேர்ந்த மக்கள் நன்மை அடைவர்.

இதன்போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் கீழ் 20 இலட்சம் ரூபா நிதியும் வைத்தியசாலைக்கென வழங்கப் பட்டது. (வ-இ)

வாழைக் குலைகள் திருட்டு:

## ஒருவர் மடக்கிப் பிடிப்பு இருவர் தப்பியோட்டம்

யாழ்ப்பாணம், செப்.6

வாழைத் தோட்டங்களில் வாழைக்குலைகளைக் களவெடுத்த நபர் ஒருவர் வாழைக் குலைகளுடன் பிடிபட்டு அவர் பொலிஸாரிடம் ஒப்படைத்த சம்பவம் ஒன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கடந்த இரண்டு மாதகாலமாக ஏழாலைப் பகுதியில் வாழைக்குலைகள் அதிகளவில் திருட்டுப் போகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இந்நிலையில் நேற்று முன்தினம் ஏழாலை மத்தி தோப்புப் பகுதியிலுள்ள வாழைத் தோட்டத்தில் சந்தேகத்திற்கிடமான நிலையில் மூவர் வாழைக் குலைகளை வெட்டி சைக்கிளில் கொண்டு செல்ல முற்பட்ட வேளை, அயலில் வசிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர் இதனை அவதானித்து இவர்களை விசாரித்துள்ளார்.

வாழைக்குலைகளுடன் நின்ற மூவரும் தப்பியோட முயற்சிக்கும்போது, பொலிஸ் உத்தியோகத்தரும் தனியார் பஸ் உரிமையாளர் ஒருவரும் இவர்களைத் தூரத்திச் சென்ற நிலையில் இருவர் தப்பிசென்றுள்ளனர். சம்பவத்துடன் தொடர்புடைய மூன்றாவது நபரை மடக்கிப் பிடித்து சுன்னாகம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சுன்னாகம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற-39)

## புதிய ஆசிரிய ஆலோசகர் சேவைக்குள் 20 பாடங்கள் உள்ளீர்ப்பு

கொழும்பு, செப்.6

கல்வி அமைச்சால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய ஆசிரிய ஆலோசகர் சேவையினுள் மொத்தமாக 20 பாடங்கள் உள்வாங்கப்பட்டுள்ளன.

புதிய கல்விச் சீர்திருத்தம் கல்வி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸால் முன்வைக்கப்படவுள்ள நிலையில், அச் சீர்திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டே இந்தப் பாடங்கள் உள்ளீர்ப்பு செய்யப்பட்டுள்ளன. இதில் முதன்மைப் பாடங்கள், தொகுதிப் பாடங்கள் மற்றும் அத்தோடு தொழில்நுட்பப் பாடங்கள் அடங்குகின்றன.

ஆசிரிய ஆலோசகர் சேவை பிரமாணக் குறிப்பில் ஆசிரிய ஆலோசகர் பதவிக்குரிய நியமனப் பாடங்கள் காணப்படாவிட்டால் தற்போது மேற்பார்வை செய்யும் பாடங்களுக்கு விண்ணப்பிக்கும் சந்தர்ப்பமும் வழங்கப்பட்டுள்ளது.

சேவைக்கு உள்ளீர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் சேவைப் பிரமாணக்குறிப்பு செயலுறுப்பெறும் தினத்திலிருந்து 5 வருட காலத்துக்குள் முதலாவது வினைத்திறன்கான் மற்றும் இணைப்பு மொழி சித்தி அடைவதும் அவசியமானது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-இ)

## தீர்வையின்றி வந்த சிகரெட்டுக்கள் மீட்பு

கொழும்பு, செப்.6

தீர்வையின்றி நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட ஆயிரம் சிகரெட்டுக்கள் பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இவை விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த நிலையில் மட்டக்குளி பேகியுசன் பகுதியில் வீடொன்றிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார். (வ)

## கசிப்பு உற்பத்தி: இருவர் கைது!

புதுக்குடியிருப்பு, செப்.6

கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வந்த இருவர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு 10ஆம் வட்டார காட்டுப் பகுதியில் பதுங்குகுழி போன்று நிலத்தைத் தோண்டி அதில் சட்டவிரோதமான முறையில் நீண்டகாலமாக கசிப்பு உற்பத்தி இடம்பெற்றுள்ளது. இதுதொடர்பில் மக்களால் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டைத் தொடர்ந்து இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பொறுப்பதிகாரி ஐ.பி பண்டார தலைமையிலான குழுவினர் நேற்று மாலை காட்டிற்குள் சென்று சுற்றிவளைப்பு தேடுதல் மேற்கொண்டுள்ளார்கள். இதன்போது 30 லீற்றர் கசிப்பு, 180 லீற்றர் கோடா, கசிப்பு காய்ச்சப் பயன்படும் மூன்று பரல்கள் மற்றும் பல பொருள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன. (வ-19)





113 குடும்பங்களுக்கு

# வீடமைப்பு முதலாம் தவணை கொடுப்பனவு வழங்கி வைப்பு

யாழ்ப்பாணம், செப்.6

அனைவருக்கும் வீடு என்ற செயற்றிட்டத்திற்கு கீழ் யாழ்ப்பாணத்தில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு வீடமைப்புக்கான உதவிகளை வழங்கும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி, 113 குடும்பங்களுக்கு, 0.6 மில்லியன் ரூபாய் பெறுமதியான வீடுளை நிர்மாணிப்பதற்கான முதலாம் தவணை கொடுப்பனவு பயனாளிகளுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. இதற்கான நிகழ்வு யாழ் மாவட்ட செயலகத்தில் இன்று காலை இடம்பெற்றது. இதன்போது, 113 குடும்பங்களுக்குமான முதலாம் தவணை கொடுப்பனவுகளை நாடாளுமன்ற குழுக்களின் பிரதி தவிசாளரும், யாழ்.மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் வழங்கி வைத்தார். இந் நிகழ்வில் யாழ் அரச அதிபரும் யாழ் ஒருங்கிணைப்பு சபையின் செயலாளருமான கணபதிபிள்ளை மகேசன், மேலதிக அரசாங்க அதிபர் ம.பிரதீபன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் திருமதி.எஸ்.நிக்கொலஸ்பிள்ளை, வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் மு.ரவீந்திரன், வீடமைப்பு அதிகார சபை அதிகாரிகள், அரச அலுவலர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர். (வ-20)

# சுயதனிமைப்படுத்தலை மீறினார் வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவர்

## இலங்கையின் வெளியுறவு அமைச்சு கவலை

கொழும்பு, செப்.6

இலங்கையில் சுயதனிமைப்படுத்தலை வெளிநாட்டு ராஜதந்திரி ஒருவர் மீறியுள்ளார் என தெரிவித்து இலங்கையின் வெளியுறவு அமைச்சு தமது கவலையை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் உள்ள ராஜதந்திரிகளுக்காக சுயதனிமைப்படுத்தல் நிலையங்களை அரசாங்கம் விருந்தகங்களில் ஏற்பாடு செய்துள்ள நிலையிலேயே அவர் இந்த சுயதனிமைப்படுத்தலை மீறியுள்ளார். .

இதன்படி சந்தேககத்துக்குரியவர்கள் 20ஆவ14 நாள்கள் சுயதனிமைப்படுத்தலுக்குள் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

எனினும் இதில் சில அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறித்து முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அந்தவகையில் சுயதனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் பொதுவாகவுள்ள உடற்பயிற்சியகங்கள் மற்றும் நீச்சல் தடாகங்களைப் பயன்படுத்துகின்றனர் என முறையிடப்பட்டுள்ளது. கடந்த மாதம் வெளிநாட்டு ராஜதந்தரி ஒருவர் சுயதனிமையில் 12 நாளில் பல பொருள் அங்காடிக்கு சென்றுள்ளார். இவ்வாறான செயற்பாடுகள் இலங்கைக்குள் மீண்டும் ஆபத்தை கொண்டு வந்துவிடும். எனவே வெளிநாடுகளில் இருந்து வரும் ராஜதந்திரிகள் உரிய சுகாதார ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு இலங்கையின் வெளியுறவுத்துறை செயலர் கோரிக்கை விடுத்துள்ளார். (ற-இ)

மேல் மாகாணத்தில்

## 24 மணித்தியாலத்தில் 358 பேர் கைது

கொழும்பு, செப்.6

மேல் மாகாணத்தின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது, கடந்த 24 மணித்தியாலத்தில் பல்வேறு குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 358 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களில் 105 பேர் ஹெரோய்ன் போதைபொருளுடனும், 102 பேர் கஞ்சாப் போதைபொருளுடனும் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ற-இ)

## விபத்தில் துண்டாகிய கையை இணைப்பதற்கு கடும் முயற்சி

இரத்தினபுரி, செப்.6

விபத்தில் துண்டாகிய இளைஞனின் கைப் பகுதியைப் இணைக்க மருத்துவர்கள் கடும் முயற்சி எடுத்துள்ளனர் என இரத்தினபுரி அரச வைத்திய சாலை சத்திரசிகிச்சைப் பிரிவின் வைத்தியர்கள் நேற்றுத் தெரிவித்தனர்.

இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் வண்டியும் தனியார் வண்டியும் இரத்தினபுரி எம்பிலிப்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் மாலை விபத்துக்குள்ளானது. இதன் போது தனியார் பஸ் வண்டியின் பின் ஆசனத்தின் வலது பக்க மூலை ஜன்னலில் கையை வைத்தவாறு அந்த இளைஞன் பயணித்துள்ளார். இ.போ.ச. பஸ் வண்டி மோதியதில் யன்னலில் கை வைத்திருந்த இளைஞனின் கை துண்டிக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். கையை இழந்தவர் கொடக்கவெல பிரதேசத்தை சேர்ந்த 20 வயதான இளைஞர் எனவும் கஹவத்தைப் பொலிசார் இ.போ.ச. பஸ் வண்டியின் சாரதியை கைது செய்துள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-இ)

அமெரிக்காவுக்கான

## இலங்கைத் தூதுவராக ரவிநாத் ஆரியசிங்க

கொழும்பு, செப்.6




அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக ரவிநாத் ஆரியசிங்க நியமிக்கப்படவுள்ளார்.

அமெரிக்காவுக்கான இலங்கையின் தூதுவராக கடமையாற்றிய ரொட்னி பெர்னாண்டோ இலங்கைக்கு மீள அழைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை நீண்டகாலமாக வெற்றிடமாக இருந்து வரும் பிரான்ஸ் நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக பேராசிரியர் க்ஷனிகா ஹிரிம்புரேகம நியமிக்கப்படவுள்ளார். கொழும்பு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உபவேந்தரான இவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவராகவும் கடமையாற்றியுள்ளார். இத்தாலி, தென் கொரியா, சீசெல்ஸ், ஈரான், அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கான தூதுவர் பதவிகள் வெற்றிடமாக இருந்து வருகின்றன.

அந்த பதவி களுக்கு தகுதியான வர்கள் விரைவில் நியமிக்கப்படஉள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செய லாளர் அட்மிரல் ஜயநாத் கொலம் பகே தெரிவித்துள்ளார். (ற-இ)

ஹெரோய்ன் கொண்டு சென்ற

## இலங்கை பொலிஸ் தமிழ்நாட்டில் கைது

கொழும்பு, செப்.6

23 கிலோ கிராம் ஹெரோய்ன் போதைப்பொருளை கபுகஸ்கந்தை பிரதேசத்திற்கு எடுத்துச் சென்ற கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவின் பொலிஸ் உத்தியோகத்தர் இந்தியாவின் தமிழ் நாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் அல்லது திட்டமிட்ட குற்றச்செயல்களில் ஈடுபடும் குற்றவாளிகளின் உதவியுடன் இந்தியாவுக்கு தப்பிச் சென்றாரா என்ற கோணத்தில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

சட்டவிரோதமாக கடல் வழியாக இந்தியாவுக்குள் பிரவேசிக்க முயன்ற போதே தமிழக பொலிஸார் அவரை கைது செய்துள்ளனர். (வ-இ)

## கஞ்சா செடிகள் மீட்பு; மூவர் கைது

கொழும்பு, செப்.6

கொஸ்லாந்தை பகுதியில் நடுகை செய்யப்பட்டிருந்த கஞ்சா செடிகள் பொலிஸாரால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் 03 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தக வலை அடுத்து மேற் கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பு தேடுதலின் போதே இக்கஞ்சா செடிகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. (ப-இ)

# பிரதமரின் அதிகாரங்களை பறிக்க ஜனாதிபதி முயற்சி

## சாடுகிறார் சமிந்த விஜேசிறி எம்.பி

கொழும்பு, செப்.6



பிரதமர் மஹிந்த ராஜபக் ஷவுக்கு தற்போது இருக்கும் அதிகாரங்களை 20ஆவது அரசமைப்பு திருத்தச் சட்டத்தின் ஊடாக ஜனாதிபதி கோத்தாபய ராஜபக் ஷ தன்வசப்படுத்தும் நிலைமையில், "தற்போது மகிழ்ச்சியா" என மஹிந்தவிடம் கேள்வி எழுப்புவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்துள்ளார். கொழும்பில் இன்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக் ஷ, இந்த அரசமைப்புத் திருத்தச் சட்டத்தின் ஊடாக நாடாளுமன்றத்திற்குச் செல்ல முன்னர் அமெரிக்காவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி, அமெரிக்க குடியுரிமையை இரத்துச் செய்ததைக் காட்டி விட்டு, எந்தக் காரணத்திற்காகவும் நாட்டை விட்டுச் செல்லப்போவதில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் எனவும் இதன்போது சமிந்த விஜேசிறி குறிப்பிட்டார். (ப-இ)

## குளத்தில் சடலம் மீட்பு

பதுளை, செப்.6

பதுளை தெமோதரை சௌதம் தோட்டம் மேற்பிரிவில் அமைந்துள்ள குளத்தில் ஆண் ஒருவரின் சடலம் இன்று அதிகாலை மீட்கப்பட்டுள்ளது.

சடலம் குளத்தில் மிதப்பதை கண்டு பிரதேச மக்களால் எல்ல பொலிஸாருக்கு தெரியபடுத்தியதையடுத்து சடலம் எல்ல பொலிசாரால் மீட்கப்பட்டுள்ளது. சௌதம்; மேற்பிரிவை சேர்ந்த 74 வயதையுடைய பெரியம்மன் பெரியான் என்பவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரேத பரிசோதனைக்காக சடலம் பதுளை மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளது. (வ-இ)

# சுற்றுச்சூழல் போராட்டத்தில் பத்திரிகை விநியோகிக்கத் தடை

## ஆர்ப்பாட்டக்காரர்கள் 13 பேர் கைது

லண்டன், செப்.6

பிரிட்டனின் பிரபல பத்திரிகை நிறுவனமான நியூஸ் கோர்ப் நிறுவனத்தின் 3 அச்சகங்களின் முன்னால் சுற்றுச் சூழல் செயற்பாட்டாளர்கள் நடாத்திய போராட்டங்களினால் பத்திரிகைகளின் விநியோகங்கள் தடைப்பட்டுள்ளன. போராட்டத்தில் ஈடுபட்ட 13பேர் வரையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

எக்ஸ்டிங்ஷன் ரிபலியன் என்ற சுற்றுச் சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றம் தொடர்பாக போராடும் குழுக்கள் நேற்று முன்தினம் இரவு பிரிட்டனின் பிராக்ஸ்பர்ன் மற்றும் நோஸ்லி ஆகிய இரண்டு செய்தித்தாள் அச்சகங்களின் முன்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவை ஊடக ஜாம்பவானான ருபர்ட் முர்டாக்கிற்குச் சொந்தமான நியூஸ் கார்ப்பரேஷனின் அச்சகங்களாகும். தி சன், தி டைம்ஸ் ஆகிய செய்தித்தாள்கள் மற்றும் டெய்லி டெலிகிராப், டெய்லி மெய்ல், ஃபினான்சியல் டைம்ஸ் போன்றவை இங்குதான் அச்சிடப்படுகின்றன.

இவை புவி வெப்பமடைதல், காலநிலை மாற்றம் மற்றும் சூழலியல் சார்ந்த நெருக்கடிகளை உண்மைத்தன்மையுடன் வெளிக்கொணர்வதில்லை என்று கூறியே இந்தப் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன. ஆர்ப்பாட்டத்தின் போது உண்மையை சொல், இலாபத்தை விட பூமி முக்கியமானது என்ற வாசகங்களுடன் பதாகைகளும், ரொபேர்ட் முர்டாக்குக்கு எதிரான பதாகைகளும் காணப்பட்டன. இந்த போராட்டத்தின் காரணமாக சில இடங்களுக்கான பத்திரிகை விநியோகம் தடைப்பட்டதுடன் சில இடங்களில் விநியோ கத்தில் தாமதங்களும் ஏற்றபட்டன. ஊடக சுதந்திரத்திற்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் 13 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர். (வ)





## மசூதியில் எரிபொருள் குழாய் வெடித்து 24 பேர் சாவு

டாக்கா, செப்.6

பங்களாதேஷில் மசூதி ஒன்றில் எரிபொருள் குழாய் வெடித்ததில் 13 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன் 37 பேர் காயமடைந்துள்ளனர். பங்களாதேஷ் தலைநகர் டக்காவில் உள்ள மசூதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தொழுகையின் இறுதி நேரத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என தெரியவருகின்றது. குழாயில் ஏற்பட்ட கசிவின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தீயணைப்பு சேவை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர்களில் 7வயது சிறுவன் ஒருவனும் உள்ளடங்குவதுடன், உயிரிழப்பு மேலும் அதிகரிக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது. (வ)

## பரிஸில் தீ விபத்து ஈழத்தமிழர் சாவு!

பாரிஸ், செப்.6

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் இடம்பெற்ற தீ விபத்தில் ஈழத்தமிழர் ஒருவர் உயிரிழந்துள்ளார். பரிஸ் 13 ஆம் வட்டாரத்தின் உள்ள 168 இலக்க கட்டடத்தின் நான்காவது தளத்தின் ஒரு வசிப்பிடத்தினுள் நேற்று முன்தினம் தீ பற்றியுள்ளது. சம்பவ இடத்திற்கு விரைந்த 60 தீயணைப்பு வீரர்கள் கொண்ட தீயணைப்புக் குழுவினர் 10 தீயணைப்பு வாகனங்கள் மூலம் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். இருப்பினும் கட்டடத்தின் நான்காவது தளம் முழுமையாக எரிந்து சேதமடைந்துள்ளது. இதில் வவுனியாவைச் சேர்ந்த பாலசுந்தரம் சுஜீவன் என்ற இளைஞர் உயிரிழந்துள்ளார் என அறிய முடிகிறது. இவருடன் அறையில் தங்கியிருந்த மூவர் வெளியே சென்ற பின்னரே தீ பற்றியுள்ளது எனவும் தெரியவருகிறது. (வ)





## 2 1/2 மணி நேரம் ஐஸ்கட்டிகளுக்குள் இருந்து உலக சாதனை

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ஒருவர் ஐஸ்கட்டி நிறைந்த பெட்டிக்குள் கிட்டத்தட்ட 2 1/2 மணி நேரத்துக்கும் மேலாக இருந்து உலக சாதனை படைத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவர் ஜோசப் கோபெர்ல். இவர் ஒரு பெட்டியில் 200 கிலோகிராம் அளவு ஐஸ்கட்டிகளை கழுத்தளவு நிரப்பிக்கொண்டு, 2 1/2 மணி நேரம் 57 நொடிகள் இருந்து சாதனை படைத்துள்ளார்.

எப்படி இந்தச் சாதனையை செய்ய முடிந்தது என்று ஜோசப்பிடம் கேட்டபோது;

நான் வலியின் மீது கவனம் செலுத்தாமல், நல்ல உணர்ச்சிகள் மீது கவனம் செலுத்தி, அதனை கற்பனையில் கொண்டு வந்ததால் இந்தச் சாதனையை செய்யமுடிந்தது- என்றார்.





## அனுமதிக்கப்பட்டதை விட 10 மடங்கு அதிக யுரேனியம் ஈரானின் கையிருப்பில்

### ஐ.நா குற்றச்சாட்டு

நியூயோர்க், செப்.6

சர்வதேச ரீதியாக அனுமதிக்கப்பட்ட யுரேனியம் கையிருப்பு அளவை விடவும் 10 மடங்கு அதிகமான யுரேனியத்தை ஈரான் தன்னகத்தே கொண்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

அந்நாட்டில் 2 ஆயிரத்து 105 கிலோ கிராம் செரிவூட்டப்பட்ட யுரேனியம் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. 2015ம் ஆண்டில் 300 கிலோ கிராம் யுரேனியத்தை வைத்திருப்பதற்கே ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. என ஐக்கிய நாடுகளின் அணுசக்தி கண்காணிப்பு முகவரகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச அணுசக்தி நிறுவன அதிகாரிகள் ஈரானில் உள்ள யுரேனியம் களஞ்சியப்படுத்தும் பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபட்டனர். கண்காணிப்பின் பின்னரே ஈரானில் உள்ள யுரேனியத்தின் அளவு தொடர்பில் தகவல் வெளியாகியுள்ளது. (வ)




# வடக்கு பிரீமியர் லீக் நேற்று ஆரம்பம்

வவுனியா, செப்.6

வடக்கு மாகாணத் துடுப்பாட்டச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரீமியர் லீக் சுற்றுப்போட்டிகள் வவுனியா நகர சபை மைதானத்தில் நேற்று ஆரம்பமானது. வடக்கு மாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர் யோ.ரதீபன் தலைமையில் இந்தச் சுற்றுப்போட்டி இடம்பெற்றது. வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங்களின் அணிகள் இதில் பங்குபற்றின.

மட்டுப்படுத்திய இருபது பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தப் போட்டியில், நேற்றுக் காலை வவுனியா மற்றும் முல்லைத்தீவு அணிகள் மோதிய நிலையில் வவுனியா அணி வெற்றி பெற்றது. நேற்று மாலை யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் அணிகளுக்கான போட்டிகள் இடம்பெற்றன.

சுழற்சிமுறையில் இடம்பெறும் இந்தப் போட்டி ஒக்ரோபர் மாதம் 4 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இறுதிப்போட்டியும் அன்றையதினம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-110)

# நான்காவது சுற்றுக்கு ஜோகோவிச் முன்னேற்றம்

நியூயோர்க், செப்.6



அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டியின் ஒற்றையர் பிரிவில் ஜோகோவிச் 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினர்.

கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடந்து வருகிறது. இதில் 5 ஆவது நாளில் நடந்த ஆண்கள் ஒற்றையர் பிரிவின் 3 ஆவது சுற்று ஆட்டத்தில் முதன்மை வீரரும், 17 கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றவருமான நோவக் ஜோகோவிச் (சேர்பியா), தரவரிசையில் 29 ஆவது இடத்திலுள்ள ஜேர்மனியின் ஜோன் லினர்ட் ஸ்ரப்பை எதிர்கொண்டார். இதில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய ஜோகோவிச் 6:3, 6:3, 6:1 என்ற நேர்செட் கணக்கில் ஜான் லினர்ட் ஸ்ரப்பை தோற்கடித்து 4 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். இந்த வெற்றியைப் பெற அவருக்கு 1 மணி 4:3 நிமிடமே தேவைப்பட்டது.

இந்த ஆண்டில் தோல்வியையே தொடாமல் தொடர்ச்சியாக 2:6 ஆவது வெற்றியைப் பெற்ற ஜோகோவிச் கடின தரை போட்டியில் பதிவு செய்த 600 ஆவது வெற்றி இதுவாகும். அடுத்த சுற்று ஆட்டத்தில் ஜோகோவிச், தரவரிசையில் 27 ஆவது இடத்தில் இருக்கும் ஸ்பெயின் வீரர் பாப்லோ காரெனோ பஸ்டாவை சந்திக்கவுள்ளார். (ற)

## கரவெட்டி பிரதேச செயலர் பிரிவு

# கழகங்களுக்கிடையிலான விளையாட்டுகள் ஆரம்பம்

கரணவாய், செப்.6

கொரோனா அச்சம் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் இன்று முதல் மீண்டும் ஆரம்பமாகவுள்ளன.

கரவெட்டி பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான கலந்துரையாடல் பிரதேச செயலர் இ.தயாரூபன் தலைமையில் நேற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போதே போட்டிகளை நடத்துவதற்கான திகதிகள் தீர்மானிக்கப்பட்டன.

அதனடிப்படையில் பெண்களுக்கான கரப்பந்தாட்ட இறுதிப்போட்டி இன்று காலை 9 மணிக்கு வல்வெட்டி கருணாகரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற இருந்தது. இதில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

அதனைத் தொடர்ந்து எதிர்வரும் 12 ஆம், 13 ஆம் திகதிகளில் ஆண்களுக்கான கால்ப்பந்தாட்டம் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும் பெண்களுக்கான கால்பந்தாட்டம் 13 ஆம் திகதி வல்வெட்டி கருணாகரன் விளையாட்டு மைதானத்திலும், தடகளப்போட்டிகள் எதிர்வரும் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக மைதானத்திலும் இடம்பெறவுள்ளன. (ற-108)



# ஐ.பி.எல்லில் 3 ஆவது வீரராக டோனி விளையாட வேண்டும்

## சுரேஷ் ரெய்னா விருப்பம்

புதுடில்லி, செப்.6

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரில் 3 ஆவது வீரராக டோனி விளையாட வேண்டும் என்று சுரேஷ் ரெய்னா விருப்பம் தெரிவித்துள்ளார்.

13 ஆவது ஐ.பி.எல். ரி20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் நவம்பர் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள நிலையில் இந்தப் போட்டிக்கான ஐ.பி.எல். அட்டவணை இன்று வெளியிடப்படும் என்று அதன் தலைவர் பிரிஜேஷ் பட்டேல் தெரிவித்துள்ளார்.

ரெய்னாவுக்கும் கப்டன் டோனிக்கும் மோதல் இருந்ததாகவும், மேலும் சி.எஸ்.கே. நிர்வாகத்துடன் கருத்து மோதல் ஏற்பட்டதாகவும், இதன் காரணமாகவே ரெய்னா விலகியதாக தகவல் வெளியானது.

இதை ரெய்னா மறுத்திருந்தார். தனது சொந்த காரணத்துக்காகவே போட்டியில் இருந்து விலகினார் தெரிவித்தார்.

ரெய்னா ஆடாததால் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியில் அவரது இடமான 3 ஆவது வரிசையில் யார் களம் இறங்க போகிறார் என்ற எதிர்பார்ப்பு இருக்கிறது. கப்டன் டோனி இந்த வரிசைக்கு பொருத்தமானவர் என்று முன்னாள் வீரர் கம்பீர் தெரிவித்திருந்தார். இந்த நிலையில் ஐ.பி.எல். போட்டியில் டோனி 3 ஆவது வீரராக களம் இறங்க வேண்டும் என்று ரெய்னா விருப்பம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

3 ஆவது வரிசையில் அசாத்திய திறமை படைத்த துடுப்பாட்ட விரர்களால் மட்டுமே விளையாட முடியும்.

அந்த வரிசை அணிக்கு அத்திபாரம் போன்றது. இதனால் டோனி 3 ஆவது துடுப்பாட்ட வீரராக ஆட வேண்டும். சர்வதேச போட்டிகளில் 3 ஆவது வீரராக ஆடிய அனுபவம் டோனிக்கு இருக்கிறது- என்றார். (ற)

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 06.09.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.